DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 76/2021
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1
Defence

Name : Ravichandiran

Father Name /
Husband Name : Arumugam

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 16th February 2026

குறுக்கு விசாரணை

எனக்கு ஆங்கிலம் நன்றாக எழுத, படிக்க தெரியும். நான் தாக்கல் செய்த புகார் மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் உள்ள விபரம் நன்கு தெரியும். தங்கவேல் பைனான்ஸில் என்னை தவிர வேறு யார்யார் பார்ட்னர்ஸ் ஆக உள்ளார்கள் என்று எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

தங்கவேல் பைனான்ஸ்க்கான அனைத்து வழக்குகளையும் நான் பிரதிநிதியாக இருந்து நடத்த வேண்டும் என்ற நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அனுப்பிய தபால் ரசீதையும் எதரி அதை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் எதிரிக்கு தொகை கொடுக்கும்போது ஆவணம் எதையும் பெற்றுக்கொண்டானா என்றால் எதிரியின் ஆதார் அட்டை மற்றும் புரோ நோட்டை பெற்றுக்கொண்டேன். மேற்படி புரோ நோட்டை ஆவணமாக இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எதிரிக்கு எந்த இடத்தில் வைத்து எனக்கு வழக்கு காசோலையை கொடுத்தார் என்று எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எங்களது நிறுவனம் பதிவுசெய்யும்போது எங்கிருந்ததோ அங்குதான் தற்போதும் இயங்குகிறதா என்றால் இல்லை.

பொதுவாக என்னிடம் கடன்வாங்குபவர்களின் வங்கி கணக்கு ரெட்டியார்பாளையத்தில் உள்ள கரூர் வைசியா வங்கியில்தான் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் கடன் பெறுபவர்கள் அனைவரையும் ரெட்டியார்பாளையம் கரூர் வைசியா வங்கியில் வங்கி கணக்கு ஆரம்பித்து அதன் மூலமாக அவர்களுக்கு பணம் செலுத்துகிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணை பாதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது)

(ஓம்/-XXXX,
நீதித்துறை நடுவர்,
வானூர்.